# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**<u>சுற்றறிக்கை எண்</u>:69** **<u>தேதி</u>:06.10.2015**

# மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

**புதிய பொது இன்சூரன்ஸ் திட்டம்**:- BSNL *ல் பணிபுரியும் நம் அனைத்து ஊழியர்களுக்கும்* LIC *நிறுவனம் காப்பீட்டு திட்டம் வழங்கியுள்ளது நாம் அறிந்ததே. அதை* 1-8-2014*க்கு பிறகு* BSNL *ல் பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு நீட்டிக்க இயலாததால் அவர்களுக்கு புதிய பொது இன்சூரன்ஸ் திட்டத்தை* LIC *அறிவித்துள்ளது. எனவே* 1-8-2014 *க் கு பிறகு பணியில் சேர்ந்த ஊழியர்களை பற்றிய தகவல்களை* LIC *கேட்டுள்ளது.*

**பஞ்சப்படி உயர்வு** : 1-10-2015 முதல் 5.3 சதம் பஞ்சப்படி உயர்ந்துள்ளது. இத்தோடு மொத்த பஞ்சப்படி 102.6 சதத்திலிருந்து 107.9 சதமாக உயர்கிறது.

**BSNL நிறுவன நாளை ஒட்டி மனித வள இயக்குனர் திருமதி சுஜாதா ரே அவர்கள் எழுதிய கடிதம்**:- *"கடும் போட்டிக்கிடையே சரியான இடத்தை பிடிக்க ஒரு மேல்நோக்கிய பயணத்தை துவக்கியுள்ளோம். கடின உழைப்பை தொடர்ந்து காத்தால் எந்த இலக்கும் அடைய முடியாத தொலைவில் இல்லை. நிறுவன புத்தாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் பாடுபட ஒருமனதாக உறுதி எடுப்போம்."* என அறைகூவல் கொடுத்துள்ளார்.

***GPF பணத்தை திருப்பிக் கொடு***:- கார்ப்பரேட் அலுவலகம் நிதி ஒதுக்காத தால் BSNL ஊழியர்களுக்கு செப்டம்பர் மாதத்தில் GPF முன்பணம் வழங்கப்படவில்லை. கார்ப்பரேட் அலுவலகத்திஅ கேட்டால் BSNL செலவழித்த பணத்தை உரிய காலத்தில் DOT திருப்பித்தரவில்லை என்கிறது. ரூ 890 கோடி ரூபாய் அவ்வாறு DOT யிடமிருந்து வரவேண்டியுள்ளதாக கூறப்படுகிறது. BSNL செலவழித்துள்ள துகையை உடனடியாக வழங்கக்கோரி மத்திய சங்கம் டெலிகாம் கமிஷனுக்கு கடிதம் எழுதியுள்ளது.

***ஏமாற்று வேலை***:- மனித சமுதாயம் இன்று சந்தித்துக் கொண்டுள்ள ஒரு பெரிய ஆபத்து பூமி வெப்பமயமாதல். பருவ நிலையில் கடுமையான மாற்றங்களை உலகம் இன்று சந்தித்துக் கொண்டுள்ளது. பூவி வெப்பமயமாவதற்கு லாப வெறி பிடித்த பன்னாட்டு நிறுவனங்கள்தான் பெரிய அளவிற்கு காரணம் என்பது உலகறிந்த ரகசியம். ஜெர்மனியை சார்ந்த பன்னாட்டு கார் கம்பெனியான வோல்க்ஸ்வாகன், வாகன புகை பரிசோதனைகளை ஏமாற்றுவதற்கான ஒரு மென்பொருளை தனது காரில் நிறுவியுள்ளது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மோசடிக்கு பின்னால் அந்த நிறுவனத்தின் CEO, மார்ட்டின் வினெர்கோர்ன் தனது பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார். தற்போது இதர பிரசித்தி பெற்ற கார்களான ஆடி மற்றும் ஸ்கோடா ஆகியவற்றிலும் இது போன்று வாகன புகை பரிசோதனையில் ஏமாற்றும் மென்பொருள்கள் நிறுவப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆடி நிறுவனம் 21 லட்சம் கார்களிலும், ஸ்கோடா நிறுவனம் 12 லட்சம் கார்களிலும் இது போன்று ஏமாற்றுகளை செய்துள்ளன.

**பொதுத்துறை வங்கிகளில் அரசின் முதலீடு 52%க்கு குறைக்கப்படும் என அருண் ஜேட்லி**:- பங்கு விற்பனையின் இறுதி குறிக்கோள் ஒட்டு மொத்த தனியார்மயம்தான் என்பது தொழிற்சங்க இயக்கங்களின் கருத்து. உலக வங்கியின் வழிகாட்டுதல் மற்றும் புதிய தாராளமய பொருளாதார கொள்கைகளின் அடிப்படையில் பொதுத்துறைகளை ஒட்டு மொத்தமாக தனியார்மயமாக்குவதை நோக்கி அரசாங்கம் சென்று கொண்டிருக்கிறது. மத்திய நிதி அமைச்சர் அருன் ஜேட்லியின் அறிக்கை இதனை மீண்டும் நிரூபித்து உள்ளது. 28.09.2015 அன்று நடைபெற்ற இந்திய வங்கிகளின் மாநாட்டில் கலந்துக் கொண்டு பேசும் போது பொதுத்துறை வங்கிகளில் உள்ள அரசின் பங்கை 52%க்கும் குறைவாக கொண்டு வர அரசு முயற்சி செய்து வருவதாக அவர் தெரிவித்து உள்ளது என்பது மோடி அரசாங்கம் வரும் ஆண்டுகளில் என்ன செய்ய போகிறது என்பதை தெரிவிக்கின்றது. பொதுத்துறை வங்கிகளில் தனது முதலீட்டை 52% என அரசாங்கம் கொண்டு வந்தது என்றால் மிக விரைவில் அதனை 49%ஆக மாற்றி விடுவார்கள். அது ஒட்டு மொத்த தனியார் மயமாக்கல் தான். வங்கி துறையில் மோடி அரசாங்கம் இதனை தான் செய்ய வேண்டும் என பெரு முதலாளிகள் விரும்புகிறார்கள். இத்தகைய நாசகர முடிவினை இந்திய தொழிலாளர் வர்க்கம் இதனை எதிர்த்து போராட வேண்டும்.

**BSNL MRS கமிட்டி அமைத்தல்:-** 14.05.2015 அன்று நடைபெற்ற 32ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தில் BSNL MRS திட்டத்தை பரிசீலிக்க ஒரு குழு அமைப்பது என முடிவு செய்யப்பட்டது. மருத்துவ செலவுகளை திரும்பப் பெறுவதில் ஊழியர்கள் படும் சிரமங்களை கணக்கில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் நான்கு மாதங்கள் கழிந்த பின்னரும், கார்ப்பரேட் அலுவலகத்தின் நிர்வாக பிரிவு இந்த கமிட்டியினை அமைக்க தடைகளை ஏற்படுத்தி வருகிறது. இந்த கமிட்டியினை விரைவில் அமைக்க வேண்டும் என நமது மத்திய சங்கம் மனித வள இயக்குனருக்கு கடிதம் எழுதியுள்ளது.

**தேசிய கவுன்சில் கூட்டம்**:- 33ஆவது தேசிய கவுன்சில் கூட்டம் 16.10.2015 அன்று காலை 11 மணிக்கு மனித வள இயக்குனர் திருமிகு சுஜாதா ரே அவர்களின் தலைமையில் நடைபெறும். 15.10.2015 அன்று ஊழியர் தரப்பு Pre COUNCIL கூட்டம் நடைபெற உள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்.**